__தேதி:-12-12-2019 **Prob.O.P.No.**3/2018 ம.சா.1 (ஞானசேகர்)__

__முதல் விசாரணை தொடர்ச்சி:-__

31.01.2018 ல் என் தாயார் காசியம்மாள் எழுதி வைத்த உயில்சாசனம் அசல் **ம.சா.ஆ.4**. 01.04.1967 ல் என் தாயார் பெயரிலுள்ள கிரையபத்திரம் பதிவு நகல் **ம.சா.ஆ.5**. 22.06.2018 ல் நான் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பிய சட்டஅறிவிப்புகளின் அலுவலக நகல்கள் **ம.சா.ஆ.6** வரிசை (எண்ணிக்கையில் 5). 10.07.2018 ல் 4 மற்றும் 6 எதிர்மனுதாரர்கள் எனக்கு கொடுத்த பதில் அறிவிப்பு **ம.சா.ஆ.7**. 17.07.2018 ல் நான் 4 மற்றும் 6 எதிர்மனுதாரர்களுக்கு கொடுத்த மறுஅறிவிப்பு அலுவலக நகல் **ம.சா.ஆ.8**. 07.09.2018 ல் ம.சா.ஆ.4 சொத்துக்களுக்கு பெறப்பட்ட வில்லங்கசான்றிதழ் **ம.சா.ஆ.9**. அந்த சொத்துக்களுக்கு என் பெயரில் வழங்கப்பட்ட வரி இரசீது நகல் **ம.சா.ஆ.10**. இந்த ஆவணம் அசலுடன் ஒப்பிடப்பட்டது. உயில் சொத்துக்களுக்கு வழிகாட்டு மதிப்பு பதிவிறக்கம் செய்யப்பட்டது **ம.சா.ஆ.11**. 20.06.2018 ல் 4 ஆம் எதிர்மனுதாரர் மீது தெப்பக்குளம் காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகாருக்கான போலிசார் கொடுத்த புகார் மனு ஏற்பு இரசீது அசல் **ம.சா.ஆ.12**. 30.05.2018 ல் உயில் சொத்தில் குடியிருந்து வரும் வாடகைதாரருக்கு நான் கொடுத்த சட்டஅறிவிப்பின் அலுவலக நகல் **ம.சா.ஆ.13**. 21.01.2016 ல் என் தாயார் காசியம்மாள் என்னையும், 2 ஆம் எதிர்மனுதாரரையும் தவிர்த்து எழுதி வைத்த உயில்சாசனம் சான்றிடப்பட்ட நகல் **ம.சாஆ.14**. ஆகவே மனுப்படி தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.